**கிழக்கு மாகாண சபை - 2014**

---

கிழக்கு மாகாண சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இவ்வறிக்கையானது மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின்படி வழங்கப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.
நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிழக்கு மாகாண சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

**(அ) மாகாண சபை நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள்**

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் நிதிக்கூற்றுகக்ள் 2015 யூன் 18 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) ஏனைய நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2015 மே 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பான செயன்முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| | கணக்கின் வகை | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 2015 மே 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 33 | 33 | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 02 | 01 | 01 |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 33 | 32 | 01 |
| (vi) | வணிக முற்பணக் கணக்குகள் | 06 | 02 | 04 |
| (v) | நிதியக் கணக்குகள் | 02 | 01 | 01 |
| (vi) | நியதிச்சட்டக் கணக்குகள் | 02 | 01 | 01 |
| | மொத்தம் | 78 | 70 | 08 |

(இ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்கான கிழக்கு மாகாண சபை முன்பள்ளி கல்வி பணியகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2010 இன் 01 ஆம் இலக்க கிழக்கு மாகாண சபை முன்பள்ளி கல்வி பணியக அதிகாரச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்கான கிழக்கு மாகாண ஆளுனர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மாகாண நிதிப்பிரமாணம் 258 இன் பிரகாரம் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்கான கிழக்கு மாகாண வருமான கணக்கின் திரண்ட நிலுவைகள் மாகாண நிதிப்பிரமாணம் 258 இன் பிரகாரம் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கருத்துரைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் 19 தலைப்புக்களின் 59 செலவின விடயங்களின் கீழான ரூபா 30,114,650 கூட்டுத்தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் செலவிடப்படாது எஞ்சியிருந்தது.

(ஆ) ரூபா 44,331,891 இனால் நிதி ஏற்பாட்டை விஞ்சிய பொறுப்புக்கள் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் 13 தலைப்புக்களின் 68 செலவின விடயங்களின் கீழ் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) 04 மாகாண அமைச்சுக்கள் மற்றும் 07 திணைக்களங்களினால் மீளாய்வாண்டில் மூலதனச் செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 247,006,215 கூட்டுத்தொகை 2015 சனவரி 30 ஆந் திகதிய பிரீ/02/2015 ஆம் இலக்க மாகாண திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையல்லா சொத்துக்களின் அசைவின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 மாகாண சபை உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்குகள்

மாகாண சபையின் 21 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் ரூபா 51,441,155 கூட்டுத்தொகையான பதவியணியினர் கடன் மீதிகள் 02 முதல் 10 ஆண்டுகள் வரையான காலவீச்சில் அறவிடப்படாது காணப்பட்டன. இந்த அறவிடப்படாத மீதிகளில் மாகாண சபையின் 12 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து இடமாற்றம் பெற்றுச்சென்றிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவையாகவுள்ள ரூபா 46,247,034 கூட்டுத்தொகையான மீதிகள், மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்தும் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்தும் நிலுவையாகவுள்ள ரூபா 4,176,641 கூட்டுத்தொகையான மீதிகள் மற்றும் மாகாண சபையின் 20 முன்னாள் உறுப்பினர்களிடமிருந்து நிலுவையாகவுள்ள ரூபா 1,017,480 கூட்டுத்தொகையான மீதிகள் என்பன உள்ளடங்கியிருந்தன.

### 2.2.4 கட்டுநிதிக் கணக்குகள்

அனைத்துக் கட்டுநிதிகளும் அடுத்த நிதியாண்டின் முதலாம் வேலை நாளன்று மாகாண திறைசேரிக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான 03 திணைக்களங்களின் ரூபா 6,486,095 கூட்டுத்தொகையான கட்டுநிதி மீதிகள் 2015 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரை மாகாண திறைசேரிக்கு திருப்பியனுப்பப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 பொது வைப்புக் கணக்குகள்

02 அமைச்சுக்கள் மற்றும் 12 திணைக்களங்களிற்குரிய ரூபா 78,941,796 கூட்டுத்தொகையான வைப்புக்கள் 02 ஆண்டுகளிற்கும் மேலாக வைத்திருக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2.6 வர்த்தக முற்பணக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 06 வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளில், 03 வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் 06 ஆண்டுகளிற்கும் மேலாக செயற்படாதிருந்தன. இருப்பினும், மாகாண நிதி ஒழுங்கு விதி 286 இன் பிரகாரம் அந்த 03 வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளையும் மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அம்பாறை, கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் கீழுள்ள புடவை விற்பனை நிலையத்தில் 2015 மே 13 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வில் ரூபா 316,132 பெறுமதியான புடவைகளின் குறைவு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், புடவைகளின் குறைவுக்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்களிற்கு எதிராக கிராமிய கைத்தொழில் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. புடவைகளின் குறைவுகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| இருப்பு பதிவேட்டின் படி விற்பனை நிலையத்திலும் களஞ்சியத்திலும் காணப்பட்ட புடவைகளின் பெறுமதி | 1,881,047 |
| கழிக்க:- பௌதீக மெய்மையாய்வின் படி அம்பாறை, விற்பனை நிலையத்திலும் களஞ்சியத்திலும் காணப்பட்ட புடவைகளின் பெறுமதி | 1,564,915 |
| குறைவாக உள்ளவற்றின் பெறுமதி | 316,132 |

## 2.2.7 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்களின் சேகரிப்புகள் தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்குச் செலுத்த வேண்டிய ரூபா 783,645,847 கூட்டுதொகை கணக்கிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. ஆகையால், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தப் பொறுப்புக்கள் அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 1,343,559,003 தொகையான திரட்டிய நிதியின் மீதி ரூபா 2,002,133,322 என மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. இருப்பினும், திரட்டிய நிதிய மீதியின் மாற்றத்திற்கான காரணம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வைப்புக்களில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு ரூபா 25,052,490 ஆக இருந்தது. எவ்வாறாயினும், காசுப் பாய்ச்சல் கூற்றில் வைப்புக்களிலிருந்தான காசு உட்பாய்ச்சலாக ரூபா 549,117,952 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. ஆகையால், வைப்புக்களிலிருந்தான காசு உட்பாய்ச்சல் ரூபா 524,065,462 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பண அறவிடுதல்களின் தேறிய அதிகரிப்பு ரூபா 802,929 ஆக இருந்தது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட காசு உட்பாய்ச்சல் பெறுமதி அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண அறவிடுதல்களிலிருந்தான காசு வெளிப்பாய்ச்சல் என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. ஆகையால், அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்களிருந்தான காசு உட்பாய்ச்சல் ரூபா 1,605,858 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மாகாண சபைக்குச் சொந்தமான 620 பல்வேறு வகைப்பட்ட வாகனங்கள் பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.8 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வைப்புக் கணக்கு தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் மாகாண சுகாதார திணைக்களத்தால் பேணப்பட்ட பதிவேடுகளில் காட்டப்பட்ட மீதிக்கும் இடையில் ரூபா 17,549,097 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 ஆம் ஆண்டிற்கான மொத்த மீண்டுவரும் மற்றும் மூலதன செலவின மீதிகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த மீதிக்கும் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பேணப்பட்ட பதிவேடுகளில் காட்டப்பட்ட மீதிக்கும் இடையில் ரூபா 1,579,027 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.9 கணக்காய்வுக்கான சான்றின்மை

(அ) மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் வழங்கப்பட்ட 07 கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் 2015 செப்தெம்பர் 15 ஆந் திகதி வரையும் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐயவினாக்களிற்குட்பட்ட கணிப்பிடக்கூடியதாகவிருந்த கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 5,953,812 ஆகும்.

(ஆ) பின்வரும் ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | தொகை | கணக்காய்விற்கு கிடைக்கப்பெறாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| காணி | 38,467,833 | காணி உரித்துறுதிகள், நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| வாகனங்கள் | 110,572,807 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 283,456,871 | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 148,267,388 | |
| கட்டிடம் மற்றும் கட்டமைப்புகள் | 1,444,686,582 | |
| ஏனைய நடைமுறையல்லா சொத்துக்கள் | 39,834,175 | |
| | 2,065,285,656 | |

### 2.2.10 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காமை

கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நி.பி 138 | சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் சான்றுறுதிப் படுத்தலின்றி கல்வி அமைச்சின் 32 உறுதிச் சிட்டைகளிற்காக ரூபா 10,961,634 தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) நி.பி 396 | 03 அமைச்சுக்கள் மற்றும் 12 திணைக்களங்களினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,178,972 பெறுமதியான 138 காசோலைகள் ஆறு மாதங்களிற்கும் மேலாக கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் அவ்வாறான சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கிழக்கு மாகாண நிதிப் பிரமாணங்கள் | |
| (i) மா.நி.பி 219.2 | பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய செயல் நிமித்த உப கட்டுநிதி ரூபா 50,000 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், ஆகக்கூடிய எல்லையினை விஞ்சி 10 சந்தர்ப்பங்களில் ரூபா 1,204,650 கூட்டுத்தொகையான உப கட்டுநிதிகளை விளையாட்டுக்கள் திணைக்களம் வழங்கியிருந்தது.<br><br>வழங்கப்பட்ட செயல் நிமித்த உப கட்டுநிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கம் முடிவடைந்தவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், விளையாட்டுக்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 174,600 தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதிகள் 32 முதல் 82 நாட்கள் வரையான காலவீச்சிலமைந்த தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன. |
| (ii) மா.நி.பி 326.2 | 2014 ஆம் ஆண்டின் முடிவில் உள்ளவாறான ஒருங்கிணைந்த நிலையான சொத்துக்கள் பயன்பாட்டுக் கூற்று 2015 ஏப்ரல் 30 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், 2008 முதல் 2014 ஆம் ஆண்டு வரைக்குமான அந்த ஒருங்கிணைந்த கூற்றுக்கள் 2015 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரை மாகாண சபையால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (iii) மா.நி.பி 365 | 02 அமைச்சுக்கள் மற்றும் 05 திணைக்களங்களால் 2015 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரை மீளாய்வாண்டிற்கான வருடாந்த மெய்மையாய்வுச் சபை நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iv) மா.நி.பி 437 | பதிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து 5 ஆண்டுகளிற்கும் மேலாக பயன்படுத்தப்பட்ட வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளக் கூடாது. இருப்பினும் பதிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து 5 ஆண்டுகளிற்கும் மேலாக பயன்படுத்தப்பட்ட 04 வாகனங்கள் கௌரவ அமைச்சர், தனிப்பட்ட செயலாளர், இணைப்புச் செயலாளர், பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரின் பாவனைக்காக சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் மீளாய்வாண்டில் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தன.<br><br>மேலும், வாகன வாடகைக்கான ஆகக்கூடிய உடன்படிக்கைக் காலம் ஆறு மாதங்களிற்கு மேற்படுதல் கூடாது. இருப்பினும், அமைச்சு 12 மாதங்களிற்காக வாடகை அடிப்படையில் 06 வாகனங்களை பெற்றிருந்தது. |

(இ) சுற்றறிக்கை

--------------------

| | |
|---|---|
| (i) 2001 மார்ச் 28 ஆந் திகதிய 01/2001 ஆம் இலக்க உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் சுற்றறிக்கை | சுற்றிக்கை ஏற்பாட்டின் படி, மாகாண சபை உறுப்பினர்களிற்கு கடன்களை வழங்குவதற்காக கையொப்பமிடுவதற்கு பிணைதாரர்களாக நிற்கும் இருவரில் ஒருவர் வருமான வரி செலுத்துபவராக இருத்தல் வேண்டும். இருப்பினும், மாகாண சபையின் மற்றொரு உறுப்பினரிடமிருந்து மாத்திரம் பிணையினை பெற்று மீளாய்வாண்டில் மாகாண சபை உறுப்பினர்களிற்கு ரூபா 4,600,000 கூட்டுத்தொகையான கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. அதன் விளைவாக, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1,017,480 கடன் மீதிகளை திருப்பிச் செலுத்துவதற்கு தவறிய 20 உறுப்பினர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு மாகாண சபைக்கு முடிந்திருக்கவில்லை. |
| (ii) 2013 செப்தெம்பர் 01 ஆந் திகதிய எஸ்ஈசீ/2013/07 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திணைக்கள சுற்றறிக்கை | 2013 செப்தெம்பர் 01 முதல் 2014 திசெம்பர் 31 வரையான காலத்திற்கு மாதாந்த சம்பங்களைச் செலுத்துகையில் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இரண்டு உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பங்களிலிருந்து ரூபா 119,755 உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 2014 நவம்பர் 24 ஆந் திகதிய பிரீ/09/2014 ஆம் இலக்க மாகாண திறைசேரிச் சுற்றறிக்கை | ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தினை மூடுவதற்கு மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு வினால் 2015 யூலை 17 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. வருமான முகாமைத்துவம்

கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், கடந்த 05 ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரங்கள் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| வரி வருமானம் | 2,181 | 1,860 | 1,496 | 1,354 | 951 |
| வரியல்லா வருமானம் | 320 | 288 | 309 | 198 | 224 |
| மொத்தம் | 2,501 | 2,148 | 1,805 | 1,552 | 1,175 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டிற்கான மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட வருமான மதிப்பீட்டின் பிரகாரம், மதுபான அனுமதிப்பத்திர கட்டணத்திலிருந்தான மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 25,000,000 ஆகும். எவ்வாறாயினும், மதுபான அனுமதிப்பத்திர கட்டணமாக மீளாய்வாண்டில் ரூபா 16,304,513 தொகை மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாகாணத்தினுள் செயற்படுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட மதுபான விநியோகஸ்தர்களின் விபரங்கள் மாகாண சபையில் காணப்படவில்லை. இதன் விளைவாக, மதுபான அனுமதிப்பத்திர கட்டணத்தை செலுத்தத் தவறிய விநியோகஸ்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு மாகாண சபையால் முடியாதிருந்தது. மீளாய்வாண்டில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து எவ்வித மதுபான அனுமதிப்பத்திர கட்டணத் தொகையும் மாகாண சபையால் சேகரிக்கப்படடிருக்காமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) நியதிச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், உள்ளூராட்சி அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட தண்டப்பணங்களுடன் தொடர்புடைய சேகரிப்புகள் மற்றும் ஆதனங்களை கைமாற்றுவது தொடர்பில் விதிக்கப்பட்ட முத்திரை வரிகள் என்பன உள்ளூராட்சி அதிகாரசபைகளால் கோரப்பட்டிருக்காமை காரணமாக உரிய உள்ளூராட்சி அதிகார சபைகளிற்கு அனுப்பப்படாமல் மாகாண சபையினால் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு உரிய உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு அனுப்பப்படாமல் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண வருமானத் திணைக்களத்தின் சேமிப்பு கணக்குகளில் இது தொடர்பில் ரூபா 783,645,847 தொகை வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) இறைகள், வாடகைகள், குத்தகைகள் போன்ற பிரதான வருமான மூலங்களிலிருந்து 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ரூபா 522,113,354 மொத்தமான வருமானத்தை சேகரிப்பதற்கு கிழக்கு மாகாணத்தில் செயற்படுகின்ற நாற்பத்தி நான்கு உள்ளூராட்சி அதிகாரசபைகள் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| உள்ளூராட்சி அதிகாரசபை | உள்ளூராட்சி அதிகாரசபைகளின் எண்ணிக்கை | மொத்த நிலுவைத் தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| மாநகர சபைகள் | 3 | 181,318,598 |
| நகரசபைகள் | 5 | 156,282,052 |
| பிரதேச சபைகள் | 36 | 184,512,704 |
| மொத்தம் | 44 | 522,113,354 |

(உ) பின்வரும் 04 பிரதேச செயலகங்களுடன் தொடர்புடைய ரூபா 73,171,230 மொத்தமான அரசாங்க காணிகளுக்குரிய குத்தகை வருமானம் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2015 யூன் 30 ஆந் திகதி வரை தொடர்ந்தும் நிலுவையாக காணப்பட்டது. இருப்பினும், அந்த நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| பிரதேச செயலகத்தின் பெயர் | 2015 யூன் 30 ஆந் திகதி வரை நிலுவையாகவுள்ள வருமானம் |
|---|---|
| | ரூபா |
| சம்மாந்துறை | 513,975 |
| மன்முனை வடக்கு | 48,538 |
| பட்டிணமும் சூழலும் | 9,928,771 |
| குச்சவெளி | 62,679,946 |
| | 73,171,230 |

## 4. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் செயற்பாடுகள் ரூபா 1,349,317,960 மிகையினை விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 16,049,131 ஆக இருந்தமையால், நிதி விளைவுகளில் ரூபா 1,365,367,091 ஆன முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 4.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் மொத்தச் செலவினம் ரூபா 20,649 மில்லியனாக இருந்ததுடன் அதில், ரூபா 15,754 மில்லியன் தொகையானது மீண்டெழும் செலவினத்திற்காக ஏற்பட்டிருந்ததுடன் அது மொத்தச் செலவினத்தில் 76 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. மொத்த மீண்டெழும் செலவினத்தில், ரூபா 12,477 மில்லியன் தொகை ஆளணி வேதனங்களிற்காக ஏற்பட்டிருந்ததுடன் அது மொத்த மீண்டெழும் செலவினத்தில் 79 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்ததுடன் அதற்கு முன்னைய ஆண்டிற்கான நேரொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 14,041 மில்லியன் தொகையானதுடன் அது அந்த ஆண்டிற்கான மொத்தச் செலவினத்தின் 67 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

## 5. செயற்பாட்டு மீளாய்வு

### 5.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டிற்கான மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, கிழக்கு மாகாண சபையின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களிற்காக மீளாய்வாண்டில் 22 வினைத்திறன்காண் தடைப் (ஈபீ) பரீட்சைகளை ஆணைக்குழு நடாத்தியிருத்தல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டில் 07 வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

(ஆ) கிழக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள விளையாட்டுக் கழகங்களிற்கிடையே பகிர்ந்தளிப்பதற்காக 2011 முதல் 2013 வரையான காலப்பகுதியில் மாகாண விளையாட்டுக்கள் திணைக்களம் ரூபா 1,122,903 பெறுமதியுடைய விளையாட்டு ஆடைகளை கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறாயினும், அந்த விளையாட்டு ஆடைகள் விளையாட்டுக் கழகங்களிற்கிடையே பகிர்ந்தளிக்கப்படாது 2015 சனவரி 26 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(இ) மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியத்தின் (பிஎஸ்டிஜீ) கீழ் குறித்த அமைச்சு அல்லது திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிகள், அது ஒதுக்கப்பட்ட நோக்கத்திற்காக சம்பந்தப்பட்ட அமைச்சு அல்லது திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அம்பாறை மாவட்டத்திலுள்ள மீனோடைகட்டு முதல் முகத்துவாரம் வரை வடிகாலை தோண்டுவதுடன் தொடர்புடைய வேலைகளை மேற்கொள்வதற்காக நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1.5 மில்லியன் கூட்டுத்தொகை அது ஒதுக்கப்பட்ட நோக்கத்திற்காக திணைக்களத்தினால் பயன்படுத்தப்படாது மத்திய அரசாங்கத்தின் கீழ் தொழிற்படுகின்ற அம்பாறை வலய நீர்ப்பாசன பணிப்பாளரால் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்களை மீள்நிரப்புவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 5.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளபடியான தேவையினைக் கருத்திற்கொள்ளாது கிழக்கு மாகாணத்தில் இயங்குகின்ற 62 மருத்துவ நிறுவனங்களால் கொழும்பு மருத்துவ தொழில்நுட்ப வழங்கல் பிரிவிலிருந்து மருந்துகள் மிகையாக பெறப்பட்டிருந்தன. இதன் விளைவாக, 2010 முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தில் பெறப்பட்டிருந்த ரூபா 21,644,508 பெறுமதியான மருந்துகள் காலாவதியாகியிருந்ததுடன் அந்த காலாவதியான மருந்துகள் 2015 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் பேணப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மாவட்டம் | மருத்துவ நிறுவனங்களின் எண்ணிக்கை | காலாவதியான மருந்துகளின் மொத்த பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா |
| திருகோணமலை | 12 | 6,168,640 |
| மட்டக்களப்பு | 23 | 12,727,805 |
| அம்பாறை | 27 | 2,748,063 |
| மொத்தம் | 62 | 21,644,508 |

(ஆ) ரூபா 4,844,631 பெறுமதியான பதினான்கு வகையான தரமற்ற மருந்துகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூதூர் ஆதார வைத்தியசாலை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 3,521,740 பெறுமதியான 146 வகையான தரமற்ற மருந்துகள் 2015 மார்ச் 09 இல் உள்ளவாறு திருகோணமலை பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டிருந்தன. இருப்பினும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இது தொடர்பில் முறையான நடவடிக்கையினை எடுத்திருக்கவில்லை.

(இ) மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள் 2008 முதல் 2011 வரையான காலப்பகுதியில் 37 மடிக்கணனிகளையும் 37 தொலைநகல் இயந்திரங்களையும் பெற்றுக் கொண்டிருந்ததுடன் அவற்றில் 12 மடிக்கணனிகளும் 12 தொலைநகல் இயந்திரங்களும் 2012 யூன் 27 ஆந் திகதி மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் மாகாண சபைக்கு மீளக் கையளிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், ரூபா 4,524,250 பெறுமதியான எஞ்சிய 25

மடிக்கணனிகளும் 25 தொலைநகல் இயந்திரங்களும் 2015 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரையிலும் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மடிக்கணனிகள், ஐ-பாட்ஸ், நாற்காலிகள், கணனிகள், தொலைக்காட்சி, தொலைக்காட்சி நிறுத்தி, நிறைவேற்றுனர் மேசை, அச்சிடல் உபகரணம், மேசை காற்றாடி, பின்னாக்கல் அட்டை, கணனித் தொகுதி மற்றும் அலுமாரிகள் போன்ற பதினைந்து தளபாட மற்றும் அலுவலக உபகரண விடயங்கள் முன்னாள் முதலமைச்சர் அவர்களிற்கும் அவரது தனிப்பட்ட பதவியணியினரதும் பாவனைக்காக 2008 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்தில் முதலமைச்சரின் செயலகம் வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், முன்னாள் முதலமைச்சரின் பதவிக்காலம் 2012 யூன் 27 இல் முடிவடைந்திருந்த போதிலும், அந்த விடயங்கள் 2015 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரையிலும் மீள கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் 2014 ஆம் ஆண்டில் இரண்டாம் சுகாதாரத் துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் (எஸ்எச்எஸ்டீபி) கீழ் ரூபா 87,456,500 பெறுமதியான 58 மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2006 – கொள்வனவு வழிகாட்டல்களின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம், மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக பிரதான கொள்வனவுத் திட்டம் (எம்பிபி) தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகம் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக எம்பிபி இனைத் தயாரித்திருக்கவில்லை.

(ii) 2006 – கொள்வனவு வழிகாட்டல்களின் 3.8 ஆம் பிரிவின் பிரகாரம், பொருட்களின் பெறுமதி ரூபா 1 மில்லியனை விஞ்சுகையில் வழங்குனருடன் ஒப்பந்த உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும். இருப்பினும், மேலே குறிப்பிடப்பட்ட மருத்துவ உபகரணங்களின் கொள்வனவு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்படாது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) கேள்வி ஆவணத்தின் 6 ஆம் பிரிவின் படி, ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களிற்குள் வழங்குனர் மருத்துவ உபகரணங்களை வழங்குதல் வேண்டுமென்பதுடன் வழங்குனர் அவ்வாறு செய்வதற்கு தவறும் பட்சத்தில் அவர் வாரத்திற்கு 0.5 சதவீதத்தில் தண்டப்பணத்தை செலுத்துவதற்கு பொறுப்புடையவராவார். இருப்பினும், 11 மருத்துவ உபகரணங்கள் 30 நாட்கள் தாமதத்தின் பின்னரே வழங்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 428,352 தொகையான தண்டப்பணம் வழங்குனர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் காலநடை பண்ணை ரூபா 576,660 மொத்தப் பெறுமதியில் ஐந்து மருந்து வகைகளை கொள்வனவு செய்திருந்தது. இருப்பினும், காலாவதியாகும் திகதிக்கு முன்னர் அந்த மருந்துகளை தொடர்புடைய நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்காக கால்நடை பண்ணை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஆகையால், மேலே குறிப்பிடப்பட்ட மருந்துகளிற்காக செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவினமாகியிருந்தது.

### 5.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உத்தியோகத்தர்கள் பட்டப் பாடநெறிகளை பூரணப்படுத்துவதற்கு தவறுமிடத்து மாகாண சபைக்கு பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் ஏற்பட்ட ஒட்டுமொத்த செலவினங்களையும் மீளளித்தல் வேண்டுமென்ற நிபந்தனையுடன் பட்டப்பின் படிப்பு முகாமைத்துவ நிறுவனத்தில் பொது நிர்வாக முதுமானி பட்ட பாடநெறியினை பின்பற்றுவதற்காக 18 உத்தியோகத்தர்களிற்கு 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் மாகாண சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. இருப்பினும், கற்கை நெறிகளை

பூரணப்படுத்துவதற்கு தவறிய உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 380,000 தொகையினை அறவிடுவதற்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) தேவையுடைய மாணவர்களிடையே பகிர்ந்தளிப்பதற்காக 2014 திசெம்பர் 29 ஆந் திகதி மாகாண கல்வித் திணைக்களம் ரூபா 536,428 செலவில் சப்பாத்துக்களையும் பாடசாலை பைகளையும் கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மேலே குறிப்பிட்ட 263 சப்பாத்து சோடிகளும் 263 பாடசாலை பைகளும் வேறு சில நோக்கங்களிற்காக அரசு சாராத நிறுவனமொன்றினால் 2013 இல் தயாரிக்கப்பட்டிருந்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் இணக்கப்பாடு இது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) கல்வித் திணைக்களத்தின் களஞ்சியத்தினால் பேணிவரப்பட்ட இருப்புப் பதிவேட்டின் பிரகாரம், மேலே குறிப்பிட்ட சப்பாத்துக்களும் பாடசாலை பைகளும் 2014 திசெம்பர் 29 ஆந் திகதியன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அத் திகதியிலேயே பாடசாலைகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களிடமிருந்து பெறப்பட்ட கூற்றுக்களின் படி, அந்த சப்பாத்துக்களும் பாடசாலை பைகளும் 2015 யூலை 23 ஆந் திகதி வரையிலும் கூட பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கிழக்கு மாகாணத்திலுள்ள அநேக பாடசாலைகள், பாடசாலைகளின் தரத்தை பேணுவதற்காக க.பொ.த. சா/த பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சிறந்த செயலாற்றலை கொண்டிராத மாணவர்களை அனுமதித்திருக்கவில்லை. அதன் விளைவாக, எவ்வித கல்வித் தகைமையுமின்றி மாணவர்கள் பாடசாலைகளை விட்டு வெளியேற வேண்டியிருந்ததுடன் இந்நடைமுறை சம்பந்தப்பட்ட மாணவர்களின் உயர் கல்வியிலும் பாதகமான விளைவை ஏற்படுத்தியிருந்தது. இது தொடர்பில் அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பாடசாலையின் பெயர் | 2014 இல் க.பொ.த. சா/த வகுப்பில் காணப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 2014 இல் க.பொ.த. சா/த பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 2014 இல் க.பொ.த. சா/த பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதியளிக்கப் படாத மொத்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| திரு/கிண்/சிராஜ் ம.ம.வி., கந்தளாய் | 53 | 28 | 25 |
| திரு/கிண்/அல்-அஸ்கா வித்தியாலயம் | 111 | 97 | 14 |
| திரு/கிண்/கிண்ணியா ம.ம.வி. | 138 | 129 | 09 |
| திரு/நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி | 56 | 44 | 12 |
| திரு/முல்/அல்-ஹிலால் மத்திய கல்லூரி | 45 | 36 | 09 |
| திரு/முல்/அல்-ஹிதாயா மகா வித்தியாலயம் | 53 | 37 | 16 |
| திரு/கிண்/அப்துல் மஜீத் வித்தியாலயம் | 12 | 09 | 03 |

## 5.4 தெளிவான முறையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) களஞ்சியப் பொருட்களிற்கு கொடுப்பனவினை மேற்கொள்கையில், பொருட்கள் கிடைக்கப்பெற்றமையினையும் அவை பொருத்தமான பொருட்பதிவேட்டுக்கு அலல்து இருப்புப் புத்தகத்திற்கு எடுக்கப்பட்டமையினையும் சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தார் உறுதிப்படுத்திக்கொள்தல் வேண்டும். இருப்பினும், ஆண்டின் இறுதியில் தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து எவ்விதப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளாது மாகாண விளையாட்டுக்கள் திணைக்களம் ரூபா 7,387,319 மொத்தப் பெறுமதியுடைய 49 காசோலைகளை வழங்கியிருந்தது.

(ஆ) திறந்த காசோலைகளை வழங்குதல் முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ள போதிலும், மாகாண விளையாட்டுக்கள் திணைக்களம் ரூபா 272,070 பெறுமதியுடைய இரண்டு திறந்த காசோலைகளை வழங்கியிருந்தது.

(இ) மாகாண விளையாட்டுக்கள் திணைக்களம், இத் திணைக்களத்தினது மாகாண பணிப்பாளரின் மிக நெருங்கிய உறவினருக்கு கொழும்புக்கு பயணம் செய்வதற்காக அதன் உத்தியோகபூர்வ வாகனத்தினை விடுவித்திருந்தது. கொழும்பு நோக்கி பிரயாணம் செய்கையில் அதன் ஒரு சில்லு செயலிழந்தமையால் வாகனத்தின் நான்கு சில்லுகளையும் அவர் மாற்றியிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. ஆகையால், மேற்படி சில்லுகளைக் கொள்வனவு செய்வதமைக்காக கொழும்பிலுள்ள நிறுவனமொன்றுக்கு ரூபா 137,000 காசோலையினை திணைக்களம் வழங்கியிருந்தது. இருப்பினும், இக் காசோலையின் செலுத்துனர் பெயர் மாகாண பணிப்பாளரின் பணிப்புரைக்கமைய மாற்றப்பட்டிருந்ததுடன் இக் காசோலை திருகோணமலையிலுள்ள வங்கியொன்றில் காசாக்கப்பட்டிருந்தது.

## 5.5 நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுகாதாரத் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் சுகாதாரத்துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் ரூபா 180,000,000 தொகையான நிதிகளை சுகாதார சேவைகள் திணைக்களம் பெற்றுக்கொண்டிருந்தது. மேற்படி நிதியில் ரூபா 36,686,574 தொகை குறித்த நோக்கங்களிற்குப் பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண சபை அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு மாகாண அமைச்சுக்கும் திணைக்களத்திற்கும் மாகாண விசேட அபிவிருத்தி மானியத்தின் கீழ் நிதிகளை ஒதுக்கியிருந்தது. அதற்கமைய, விவசாய அமைச்சும் கிராமிய அபிவிருத்தி திணைக்களமும் கிராமிய மின்சாரம் வழங்குதல் நோக்கத்திற்காக 2014 ஆம் ஆண்டில் இம் மானியத்தின் கீழ் முறையே ரூபா 1 மில்லியன் மற்றும் ரூபா 1.485 மில்லியன் தொகைகளை பெற்றுக்கொண்டிருந்தன. இருப்பினும், நிதிகள் ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளாது வேரொறு நோக்கத்திற்காக வீதி அபிவிருத்தி அமைச்சுக்கு இந்த நிதி விடுவிக்கப்பட்டிருந்தது.

## 5.6 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டு சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான பதினைந்து வாகனங்கள் 01 முதல் 03 ஆண்டுகள் வரையான காலவீச்சில் தொடர்ந்தும் பயன்படுத்தப்படாது வழங்கல் பிரிவில் விளைவற்றிருந்தன. இருப்பினும், அவற்றை திருத்தவதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அறிவு எழுச்சி அஸ்திவார செயற்திட்டம் (ரீஎஸ்ஈபி) என்ற வகையில் பாடசாலைக் கல்வி மரிமாற்றத்தின் கீழ் ரூபா 125,542,617 மொத்தமான கிரயத்தில் கிழக்கு மாகாணத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் பதினைந்து மஹிந்தோதய ஆய்வுகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டில் தொடர்புடைய பாடசாலைகளிற்கு கையளிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், இந்த ஆய்வுகூடங்களில் 02 ஆய்வுகூடங்கள் மாத்திரம் தற்போது மாணவர்களால் பயன்படுத்தி வரப்படுவதுடன் ரூபா 108,203,113 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட எஞ்சிய 13 ஆய்வுகூடங்களும் 2015 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரை பயன்படுத்தப்படாதிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அமுலாகக்ல் திட்டத்தின் கீழ் ரூபா 58,114,331 மொத்தக் கிரயத்தில் ஆய்வுகூடங்களிற்கு வழங்கப்பட்டிருந்த தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன ஒரு ஆண்டிற்கும் மேலாக விளைவற்று வைக்கப்பட்டிருந்தன. 2014 ஆம் ஆண்டில் ரூபா 24,527,750 மொத்தக் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு மேற்குறிப்பிட்ட ஆய்வுகூடங்களிற்கு வழங்கப்பட்டிருந்த 325 கணனிகளும் 01 ஆண்டிற்கும் மேலாக விளைவற்று வைக்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) 2015 யூலை 07 ஆந் திகதி அட்டாளைச்சேனை, சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வில் ரூபா 115,000 பெறுமதியான மூன்று மருத்துவ உபகரணங்கள் குறித்துரைத்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது ஒரு ஆண்டிற்கும் மேலாக களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) பிரதேசத்தில் காணப்படுகின்ற விவசாய மற்றும் பாலுணவு உற்பத்திப் பொருட்களின் 30 சதவீதத்திற்கு சந்தைப்படுத்தல் வசதியினை வழங்குவதற்காக ரூபா 5.25 மில்லியன் கிரயத்தில் 2012 இல் அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பில் விற்பளை நிலையமொன்றை விவசாயத் திணைக்களம் நிர்மாணித்திருந்தது. இருப்பினும், இந்த நிலையம் 2015 யூலை 07 ஆந் திகதி வரை அந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. நீர் பட்டியல் கட்டண நிலுவைகளாக ரூபா 8,998 தொகை திணைக்களத்தினால் செலுத்த வேண்டியுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது. எனினும், இந்த விற்பனை நிலையத்தினை 2015 யூலை 07 ஆந் திகதி வரை எந்வொரு நபர் அல்லது நிறுவனம் பயன்படுத்தியிருந்தமைக்கான ஆவணச் சான்று எதுவும் காணப்படவில்லை.

(உ) உள்நாட்டுக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்களிற்கு பாதுகாப்பான வதிவிட வசதிகளை வழங்குவதற்காக திருகோணமலையில் பாதுகாப்பு இல்லமொன்றை தாபிப்பதற்கு 2012 ஆம் ஆண்டில் சமூக சேவைகள் திணைக்களத்திற்கு ரூபா 18 மில்லியன் பெறுமதியான கட்டிடமொன்றை யூஎன்எச்சீஆர் அன்பளிப்புச் செய்திருந்ததுடன் என்ஆர்சீ இக் கட்டிடத்திற்குத் தேவையான உபகரணங்களை 2013 ஆம் ஆண்டில் அன்பளிப்புச் செய்திருந்தது. இருப்பினும் இக் கட்டிடமும் கட்டிடத்திற்காக வழங்கப்பட்ட உபகரணங்களும் தொடர்புடைய நோக்கங்களிற்காக 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இப் பாதுகாப்பு இல்லம் எவ்வித நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படாதிருந்த போதிலும், 2013 மார்ச் 14 ஆந் திகதி முதல் அதற்கான பாதுகாப்புச் சேவைக் கட்டணம் ரூபா 1,092,000 தொகையினையும் மின்சாரக் கட்டணம் ரூபா 48,200 தொகையினையும் திணைக்களம் செலுத்தியிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஊ) சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு 2013 ஆம் ஆண்டில் ரூபா 1.99 மில்லியன் கிரயத்தில் மூதூர், அல்லைநகரில் ஐசீரீ கல்வி நிலையமொன்றை நிர்மாணித்திருந்த போதிலும், இந்த நிலையம் 2015 ஆகஸ்ட் 04 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. ஐசீரீ நிறுவனத்தில் பொருத்துவதற்காக ரூபா 960,000 மொத்தக் கிரயத்தில் 2014 இல் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஐசீரீ உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் என்பன 2015 ஆகஸ்ட் 04 ஆந் திகதி வரை பொருத்தப்படாமல் வைக்கப்பட்டிருந்தமை மேலும், அவதானிக்கப்பட்டது.

## 5.7 இணங்காணப்பட்ட நட்டங்கள்

மாகாண சபையின்அதிகாரத்தின் கீழுள்ள அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் அவற்றின் வாகனங்களைத் திருத்துவதற்காக குறிப்பிடத்தக்களவு பொது நிதியினை செலவிட்டிருந்ததுடன் பெருமளவு தொகையினை திருத்தும் கிரயமாக செலவிட்ட பின்னர் அந்த வாகனங்கள் அகற்றப்பட்டிருந்தன. இது தொடர்பில் அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்பட்டுள்ளன.

(அ) ரூபா 8 மில்லியன் கிரயத்தில் 2008 இல் கொள்வனவு செய்யப்பட்ட வீதி அபிவிருத்தி அமைச்சுக்குரிய வாகனமொன்று 2014 ஒக்தோபர் 08 ஆந் திகதி வெல்லவாயவில் விபத்துக்குள்ளாகியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சு இந்த வாகனம் தொடர்பில் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த செயலாற்றல் பொழிப்பு அல்லது ஏனைய எந்தவொரு பதிவேட்டையும் பேணியிருக்கவில்லை. ஆகையால், விபத்து ஏற்பட்ட நேரத்தில் வாகனத்தில் பிரயாணம் செய்த உத்தியோகத்தரின் பெயர் மற்றும் பயணத்தின் நோக்கம் போன்ற தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ii) இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டவுடன் இழப்புத் தொகையினையும் காரணத்தையும் மதிப்பிட்டு நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம் பொறுப்பினை சுமத்துவதற்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், ஒரு முறைசார்ந்த விசாரணை விபத்து இடம்பெற்று 11 மாதங்களின் பின்னரே நடாத்தப்பட்டிருந்தது.

(iii) 2015 மார்ச் மாதம் 31 ஆந் திகதி விசாரணைச் சபையொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அது நட்டத்தின் அளவினை மதிப்பிட்டு நட்டங்களிற்கான பொறுப்பினை சுமத்தியிருக்கவில்லை.

(iv) இந்த விபத்து தொடர்பில் காப்புறுதிக் கம்பனிக்கு அறிவிப்பதற்கு அமைச்சு தாமதித்திருந்தமையால் காப்புறுதிக் கோரிக்கையினை ஏற்றுக்கொள்வதற்கு காப்புறுதிக் கம்பனி மறுத்திருந்தது. ஆகையால், இந்த நட்டத்திற்கான இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சுக்கு முடியாது போயிருந்தது.

(v) இந்த வாகனத்தை திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அது விபத்து இடம்பெற்ற திகதியிலிருந்து தனியார் கராஜ் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 8 மில்லியன் கிரயத்தில் 2008 இல் கொள்வனவு செய்யப்பட்ட விவசாய அமைச்சுக்குரிய வாகனமொன்று 2013 மே 27 ஆந் திகதி குளியாபிடியவிலும் மீண்டும் 2013 யூலை 24 ஆந் திகதி யக்கலையிலும் விபத்துக்குள்ளாகியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 103(1) இன் பிரகாரம் பொலிஸ் அறிக்கையினை பெற்றுக்கொள்வதற்காக இந்த விபத்துக்களை அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் சாரதி அறிவித்திருக்கவில்லை.

(ii) இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டவுடன் இழப்புத் தொகையினையும் காரணத்தையும் மதிப்பிட்டு நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம் பொறுப்பினை சுமத்துவதற்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், விசாரணைச் சபையொன்று இது வரை நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இந்த வாகனம் ரூபா 8 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், கடந்த ஆறு ஆண்டுகளில் இந்த வாகனத்தை திருத்துவதற்காக ரூபா 4.96 மில்லியன் மொத்தத்தொகை செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், பெருமளவான

தொகை திருத்தக் கிரயமாக ஏற்பட்ட பின்னர் இந்த வாகனம் தகுதியற்றதாக்கப்பட்டிருந்தது.

## 5.8 ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒன்று ரூபா 104,750 வீதம் 10 சூரிய சக்தி விளக்குகளை வழங்கி பொருத்தவதற்காக விவசாய அமைச்சு கம்பனியொன்றுக்கு ஒப்பந்தமொன்றை வழங்கியிருந்ததுடன் அமைச்சு மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியம் (பிஎஸ்டீஜீ) இன் கீழ் ஒதுக்கப்பட்ட நிதிகளிலிருந்து 2014 ஆம் ஆண்டில் ரூபா 1,047,500 மொத்தத் தொகையினை செலவிட்டிருந்தது. இருப்பினும், வீதி அபிவிருத்தி அமைச்சும் இதே கம்பனிக்கு இக் காலப்பகுதியில் ஒன்று ரூபா 165,000 வீதம் ஒத்த வகையான சூரிய சக்தி விளக்குகளை வழங்கி பொருத்தவதற்கு ஒப்பந்தமொன்றை வழங்கியிருந்தது. ஆகையால், வீதி அபிவிருத்தி அமைச்சு கோனவத்த, அட்டாளச்சேனை ஆகிய இடங்களில் 21 சூரிய சக்தி விளக்குகளை வழங்கி பொருத்தவதற்காக ரூபா 1,265,250 தொகையினை மேலதிகமாக செலுத்தியிருந்தது. ஒத்த கம்பனிக்கு மேற்குறிப்பிட்ட இரண்டு ஒப்பந்தங்களையும் வழங்குவதற்காக விவசாய அமைச்சிற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவராககவும் வீதி அபிவிருத்தி அமைச்சின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினராகவும் இந்த உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தமை இது தொடர்பில் மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) விவசாய திணைகக்ளம் ரூபா 12,020,000 மொத்த கிரயத்தில் 2010 ஆம் ஆண்டில் அம்பாறை விவசாய பிரதிப் பணிப்பாளரின் அலுவலக கட்டிடமொன்றை நிர்மாணித்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த அலுவலக கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணி மீளாய்வாண்டின் இறுதி வரை விவசாய திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அலுவலக கட்டிட நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் (யூடீஏ) தயாரிக்கப்பட்ட நடைமுறைகளுடன் திணைக்களம் இணங்கி ஒழுகியிருக்கவில்லை. ஆகையால், யூடீஏ இதனை அனுமதியற்ற நிர்மாணமாக கருதியிருந்தது.

(iii) பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக, தேவையான அங்கீகாரமும் தீர்வுச் சான்றிதழும் இக் கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, யூடீஏ இடமிருந்து முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமைக்காக ரூபா 1,009,800 பெறுமதியான சேவைக் கட்டணமொன்றை யூடீஏ விதித்திருந்ததுடன் யூடீஏ இனால் திணைக்களத்திற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டமை காரணமாக சட்டக் கட்டணங்களாக ரூபா 16,000 இனை செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(iv) அம்பாறை விவசாய பிரதிப் பணிப்பாளர் இந்த அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பது தொடர்பில் அம்பாறை நகர சபையிடமிருந்து தீர்வுச் சான்றிதழை கோரியிருந்தார். இருப்பினும், பின்வரும் காரணங்களால் தீர்வுச் சான்றிதழை வழங்குவதற்கு நகர சபை மறுப்புத் தெரிவித்திருந்தது.

- இக் கட்டிடம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வீதியின் எல்லைப் பிரதேசத்தில் நிர்மாணிகக்ப்பட்டிருந்தமை.
- இக் கட்டிடம் ஊணமுற்றோருக்கான நுழைவு வசதிகளின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்தமை.

- இக் கட்டிடம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வீதியின் எல்லைப் பிரதேசத்தில் நிர்மாணிகக்ப்பட்டிருந்தமையால் ஆர்டீஏ ரூபா 10,000 தண்டப்பணத்தை விதித்திருந்தமை.

## 5.9 ஆளணி நிர்வாகம்

மாகாணசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரித்த மற்றும் உள்ளபடியான ஆளணி தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) மாகாணசபையின் அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்

| | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடங்கள் | மேலதிகம் |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 1,583 | 1,306 | 277 | - |
| மூன்றாம் மட்டம் | 1,750 | 1,458 | 292 | - |
| இரண்டாம் மட்டம் | 24,873 | 24,910 | - | 37 |
| ஆரம்ப மட்டம் | 7,411 | 6,666 | 745 | - |
| | 35,617 | 34,340 | 1,314 | 37 |

(ஆ) பாடசாலைப் பதவியணியினர்

| மாவட்டம் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | | உள்ளபடியான எண்ணிக்கை | | மேலதிகம் | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | அதிபர்கள் | ஆசிரியர்கள் | அதிபர்கள் | ஆசிரியர்கள் | ஆசிரியர்கள் | அதிபர்கள் |
| திருகோணமலை | 342 | 4,496 | 271 | 4,612 | 116 | 71 |
| மட்டக்களப்பு | 425 | 5,585 | 306 | 5,668 | 83 | 119 |
| அம்பாறை | 514 | 7,007 | 439 | 7,663 | 656 | 75 |
| மொத்தம் | 1,281 | 17,088 | 1,016 | 17,943 | 855 | 265 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மூதூர், கின்னியா, மட்டக்களப்பு மேற்கு மற்றும் பட்டிருப்பு போன்ற வலயக் கல்வி அலுவலகங்களில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மிகை ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 235 ஆகக் காணப்பட்ட போதிலும், திருகோணமலை, திருகோணமலை வடக்கு மற்றும் கற்குடா போன்ற வலய அலுவலகங்களில் காணப்பட்ட வெற்றிடங்கள் 70 ஆகும். இருப்பினும், மிகையான ஆசிரியர்கள் காணப்படுகின்ற பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதன் மூலம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாகாண கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாணத்தில் அதிபர்களிற்கான நிலவிய வெற்றிடங்களின் மொத்த எண்ணிக்கை 265 ஆக இருந்த போதிலும், அதிபர்களாக செயற்பட்டிருக்காத அதிபர் தரத்தினைச் சார்ந்த அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை 239 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், அதிபர் தரத்தைச் சார்ந்த அலுவலர்கள் அதிபர்களாக செயற்பட்டிருக்காத பாடசாலைகளிருந்து அலுவலர்களை இடமாற்றம் செய்வதன் மூலம் அதிபர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) பின்வரும் கல்வி வலயங்களில் கணிதம், ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பிரதான பாடங்களிற்கான ஆசிரியர்களில் மிகையும் பற்றாக்குறையும் காணப்பட்ட போதிலும், மாகாணத்தினுள் மிகையாகக் காணப்பட்ட பதவியணியை பற்றாக்குறை நிலவிய இடங்களிற்கு வழங்கி சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| **கல்வி வலயம்** | **கணிதம்** | | **ஆங்கிலம்** | | **விஞ்ஞானம்** | | **தகவல் தொழில்நுட்பம்** | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **மிகை** | **பற்றாக் குறை** | **மிகை** | **பற்றாக் குறை** | **மிகை** | **பற்றாக் குறை** | **மிகை** | **பற்றாக் குறை** |
| **திருகோணமலை** | | | | | | | | |
| திருகோணமலை | - | 31 | - | 28 | 08 | - | - | 08 |
| திருகோணமலை வடக்கு | - | 14 | - | 14 | - | 17 | 08 | - |
| மூதூர் | - | 70 | - | 36 | - | 09 | 04 | - |
| கிண்னியா | - | 14 | - | 31 | 03 | - | - | 08 |
| **மட்டக்களப்பு** | | | | | | | | |
| மட்டக்களப்பு மத்திய | - | 41 | - | 26 | 23 | - | - | 15 |
| மட்டக்களப்பு மேற்கு | - | 35 | - | 45 | - | 30 | - | 03 |
| கல்குடா | - | 46 | - | 54 | - | 21 | - | 14 |
| **அம்பாறை** | | | | | | | | |
| கல்முனை | 06 | - | - | 08 | 65 | - | - | 26 |
| சம்மாந்துறை | - | 39 | - | 08 | 27 | - | - | 04 |
| அக்கரைப்பற்று | 32 | - | - | 16 | 56 | - | - | 08 |
| திருக்கோவில் | - | 22 | 02 | - | 13 | - | - | 02 |

(இ) சுகாதாரத்துறை பதவியணியினர்

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் (பிடீஎச்எஸ்) மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் (ஆர்டீஎச்எஸ்) அலுவலகங்களில் சுகாதார உத்தியோகத்தர்கள் மேலதிகமாகவும் பற்றாக்குறையாகவும் காணப்பட்டனர். இருப்பினும், மாகாணத்தினுள்ளே பற்றாக்குறையான பதவியணியினருக்கு எதிராக மேலதிகமாகக் காணப்பட்ட பதவியணியினரை சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **பதவி** | **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்** | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **அம்பாறை** | | **கல்முனை** | | **மட்டக்களப்பு** | | **திருகோணமலை** | |
| | **மிகை** | **பற்றாக் குறை** | **மிகை** | **பற்றாக் குறை** | **மிகை** | **பற்றாக் குறை** | **மிகை** | **பற்றாக் குறை** |
| தாதி உத்தியோகத்தர் | - | 23 | 06 | - | - | 53 | - | 22 |
| பொது சுகாதார பரிசோதகர் | - | 07 | 03 | - | - | 01 | - | 09 |
| பொது சுகாதார குடும்பநல உத்தியோகத்தர் | - | 25 | 03 | - | - | 18 | - | 20 |
| பதிவாளர் | - | 06 | - | 23 | - | 38 | 28 | - |
| எஸ்கேஎஸ் (கனிஷ்ட) | 16 | - | 45 | - | 29 | - | - | 16 |

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மாகாண சபை, 05 அமைச்சுக்கள் மற்றும் 28 மாகாண திணைக்களங்கள் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

### 6.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 யூன் 09 ஆந் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் காலாண்டுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 18 திணைக்களங்கள் ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தையேனும் நடாத்தியிருக்கவில்லை.

### 6.3 கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம், மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் 2014 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.4 தீர்வுகாணப்படாத கணக்காய்வுப் பந்திகள் மீதான அவதானிப்புக்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 250 வேலையற்ற இளைஞர்களிற்கு கொரிய மொழி கற்பித்தல் வகுப்புக்களை நடாத்துவதற்காக மாகாண நிதியிலிருந்து முற்பணமாக ரூபா 2,000,000 தொகை 2008 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கொரிய மொழி வகுப்புகள் எதிர்பார்க்கப்பட்டவாறு நடாத்தப்படாதிருந்ததுடன் மேற்குறிப்பிடப்பட்ட முற்பணம் 2015 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் ஒரு மாதத்திற்குள் விரிவான மற்றும் முன்னேற்றகரமான அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு முதலமைச்சரின் செயலாளருக்கு மாகாண அரச கணக்குகள் குழு 2013 ஒக்தோபர் 14 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் பணிப்புரை விடுத்திருந்தது. இருப்பினும், அவ்வறிக்கை 2015 மே 15 ஆந் திகதி வரை குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வகம்
(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) வாகனங்களின் பாவனை
(ஊ) ஆளணி நிர்வாகம்